Deccan Chronicle

Dated: 06.02.2024

Candidates also asked not to carry children in arms, vehicle

# EC cautions all parties against use of kids in poll campaigning

DC CORRESPONDENT
NEW DELHI, FEB. 5

The Election Commission has asked political parties to refrain from using children in campaigning "in any form", including distribution of posters, pamphlets, sloganeering and in gatherings like rallies.

In a directive sent to parties, the poll panel said there is "zero tolerance" towards use of children in any manner during the electoral process by parties and candidates. In the "strict directive", that comes ahead of the Lok Sabha polls, candidates have also been asked not to carry children in their arms while campaigning.

"In continuation of its earlier directives to parties and candidates to address plummeting levels of campaign discourse and to maintain respectful discourse towards persons with disabilities, the EC has issued strict directives regarding use of children in any election-related activities. Political leaders and candidates should not use children for campaign activities in any manner including holding a child in their arms, carrying a child in a vehicle or in rallies," the EC order said.

> THE MERE presence of a child accompanied by their parent or guardian in proximity of a political leader and who is not involved in any poll campaigning activity , will not be construed as a violation

> THE ELECTION Commission has also unequivocally directed all election officials and machinery to refrain from involving children in any capacity during election-related work or activities

However, the mere presence of a child accompanied by their parent or guardian in proximity of a political leader and who is not involved in any election campaigning activity by the political party, will not be construed as a violation of the guidelines.

The EC directive further said, this prohibition extends to the use of children to create the semblance of a political campaign in any manner, including use through poem, songs, spoken words, display of insignia of political party/candidate, exhibiting ideology of political party, promoting achievements of a political party or criticising the opponent political parties or candidates.

Quoting legal provisions in this regard, the EC highlighted the Bombay high court order dated August 4, 2014 on a PIL — Chetan Ramlal Bhutada vs state of Maharashtra and others, which had stressed the need to ensure that political parties do not allow participation of minor children in any election related activities.

"The commission has unequivocally directed all election officials and machinery to refrain from involving children in any capacity during election-related work or activities," the EC said.

The Times of India

Dated: 06.02.2024

# EC bans use of children for election-related activities

Bharti.Jain@timesgroup.com

**New Delhi:** Parading cute toddlers at poll rallies either dressed up as a prominent politician or sporting insignia tied to a political party or its ideology, or having politicians hold them in their arms and drive them around for heart-melting campaign trail photos, will be a strict no-no in the general election.

An exception has however been made where the child is accompanied or carried by his parent or guardian, in the proximity of a leader, and who is not involved in any campaign-related activity.

The Election Commission Monday, in its first-ever consolidated instructions against the use of children in electioneering, issued directives to poll officers as well as parties and candidates, prohibiting the participation of children in election-related activities. Though there were earlier instructions by EC on this, the latest directives cover scenarios like children being sported as "subtle vote-catchers" or being made to speak or wear insignia to promote a party or candidate or to criticise an opponent.

**No use of children for activities like distribution of posters, rallies and sloganeering, EC has directed parties, candidates and their agents**

The instructions ask the poll machinery to refrain from engaging child labour for election-related activities. The district election officers or returning officers shall be personally responsible for any violation of anti-child labour laws, and face severe disciplinary action as well as consequences of the law.

EC has directed parties, candidates and their agents not to employ children for activities like distribution of posters and pamphlets, sloganeering, campaign rallies and election meetings, citing provisions of the Child Labour (Prohibition and Regulation) Act, 1986 and extant guidelines of the National Commission for Protection of Child Rights. The participation of a child in the semblance of a campaign may either be by spoken word, poem or song; display of insignia of the party of candidate; exhibiting ideology of political party; promoting achievements of a party or criticising its rivals.

The Hindu (Tamil)

Dated: 06.02.2024

### தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து 2 நாள் ஆலோசனை

# ஆணைய அதிகாரிகள் இன்று சென்னை வருகை

**சென்னை**

நாடாளுமன்ற தேர்தலுக்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய, இன்று சென்னை வரும் இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள், தலைமை தேர்தல் அதிகாரி உள்ளிட்டோருடன் 2 நாட்கள் ஆலோசனை நடத்துகின்றனர்.

நாடாளுமன்ற தேர்தல் விரைவில் அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் மாநிலம் தோறும் தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு நடைபெற்று வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் முன்னெற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைய அதிகாரிகள் இன்று சென்னையில் ஆலோசனை நடத்துகின்றனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர் அஜய் பாது தலைமையில், தேர்தல் ஆணைய முதன்மை செயலாளர் மல்லே மாலிக் ஆகியோர் இன்று காலை 7.45 மணிக்கு டெல்லியில் இருந்து புறப்பட்டு சென்னை வருகின்றனர்.

சென்னை தலைமைச்செயலகத்தில் பகல் 12 மணிக்கு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு மற்றும் தேர்தல் துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்துகின்றனர்.

தொடர்ந்து மதியம் 2.30 மணிக்கு தலைமை செயலகத்தில் வருமானவரித் துறை, காவல்துறை, வருவாய் புலனாய்வுத் துறை உள்ளிட்ட சுங்கத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் மாலை 5.30 மணிவரை ஆலோசனை நடத்துகின்றனர்.

அதன்பின், நாளை காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை மாவட்ட தேர்தல் அதிகாரிகள், காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் காணொலிவாயிலாக தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர். அதன்பின் இரவு 9 மணிக்கு மீண்டும் டெல்லி புறப்பட்டுச் செல்கின்றனர்.

இந்நிலையில், இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தயாராக இருக்கும்படி தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு அறிவுறுத்தியுள்ளார்.

Two days Commission visit on Chennai for review the Poll Preparedness for General Elections to Lok Sabha, 2024.

The Hindu (Tamil), Dated: 06.02.2024

## பிரச்சாரத்தில் சிறுவர்களை பயன்படுத்த கூடாது கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவு

● புதுடெல்லி

அரசியல் கட்சிகள் தேர்தல் பேரணியில் எந்த வகையிலும் சிறுவர்களை பயன்படுத்தி பிரச்சாரங்களை மேற்கொள்வதற்கு இந்திய தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களில் மக்களவை தேர்தல் நடைபெறவுள்ளது. அரசியல் கட்சிகள் அதற்கு தங்களை தயார்படுத்தி வருகின்றன. இந்த நிலையில், சிறுவர்களை தேர்தல் பிரச்சாரங்களில் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :

சுவரொட்டிகள் ஒட்டுதல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்தல், பிரச்சாரங்களில் முழக்கமிடுதல் உள்ளிட்ட தேர்தலுக்கு முன்னதான பிரச்சார பணிகளில் சிறுவர்களை ஈடுபடுத்தக்கூடாது. குழந்தைகளை பயன்படுத்தி தேர்தல் பிரச்சாரம் செய்யும் கட்சிகளிடம் தேர்தல் ஆணையம் எந்தவிதத்திலும் சகிப்புத்தன்மையுடன் நடந்துகொள்ளாது. அரசியல் தலைவர்கள் மற்றும் வேட்பாளர்கள் குழந்தைகளை கையில் ஏந்துவது, வாகனத்தில் அவர்களை ஏற்றிச் செல்வது, பேரணியில் அவர்களை பங்கேற்க வைப்பதும் தடை செய்யப்படுகிறது. மேலும், கவிதை, பாடல், பேச்சுவார்த்தை, அரசியல் கட்சி அல்லது வேட்பாளரின் சின்னங்களை காட்சிப்படுத்துவது போன்ற எந்த வகையிலான அரசியல் பிரச்சார சாயலை உருவாக்க குழந்தைகளை பயன்படுத்துவதற்கான தடை நீட்டிக்கப்படுகிறது.

இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

Election Commission cautions all parties against use of kids in any poll campaigning.

Daily Thanthi
Dated: 06.02.2024

# தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் எச்சரிக்கை

புதுடெல்லி, பிப்.6-

தேர்தல் பிரசாரத்தில் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது என்று அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

### நன்கொடை விவரம்

தலைமை தேர்தல் கமிஷனராக ராஜீவ்குமார் பதவியேற்றதில் இருந்து அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் அடுத்தடுத்து உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது.

தாங்கள் பெற்ற நன்கொடை விவரங்களை தெரிவிக்கவேண்டும் என்று உத்தரவிட்டது. பெயரளவில் செயல்படும் அரசியல் கட்சிகளின் பதிவுகளை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தது.

தேர்தல் பிரசாரத்தில் மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்தும் வார்த்தைகளை பயன்படுத்தக்கூடாது என்றும் கூறியது.

### துண்டு பிரசுரம்

ஏப்ரல், மே மாதங்களில் நாடாளுமன்ற தேர்தல் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், அரசியல் கட்சிகளுக்கு புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது. இதுகுறித்து தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தேர்தல் பிரசாரத்தின் போது, அரசியல் கட்சிகளோ, வேட்பாளர்களோ எவ்வகையிலும் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது. சுவரொட்டி வினியோகித்தல், துண்டு பிரசுரம் வினியோகித்தல் உள்பட எந்த பணியிலும் பயன்படுத்தக்கூடாது.

### அதிகாரியின் பொறுப்பு

பிரசாரத்தில், குழந்தைகளை கையில் தூக்கி வைத்திருக்கக்கூடாது. வாகனங்களிலோ, பேரணிகளிலோ குழந்தைகளை ஏற்றி செல்லக்கூடாது. அதுபோல், அனைத்து தேர்தல் அதிகாரிகளும் தேர்தல் தொடர்பான எந்த பணியிலும் குழந்தைகளை ஈடுபடுத்தக்கூடாது.

குழந்தை தொழிலாளர்கள் தொடர்பான அனைத்து சட்டங்களும் பின்பற்றப்படுவதை உறுதி செய்வது மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் தனிப்பட்ட பொறுப்பு ஆகும்.

### ஒழுங்கு நடவடிக்கை

இந்த விதிமுறைகளை தேர்தல் அதிகாரிகள் மீறினால், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இருப்பினும், அரசியல் கட்சியால் எந்த தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபடுத்தப்படாத ஒரு அரசியல் தலைவரை பெற்றோர் அல்லது பாதுகாவலர் துணையுடன் ஒரு குழந்தை வெறுமனே சந்திப்பதை விதிமீறலாக கருத முடியாது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.